வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-நாராயணசாமி

தேதி 10.12.2025 நேரம் மாலை 6.10 மணி

-----------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

மனித உரிமைகளை பாதுகாக்கும் நாடு என்பதற்கு அப்பாற்பட்டு, மனித உரிமைகளை கொண்டாடும் நாடாக இந்தியா திகழும் என்று குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறி உள்ளார்.

தொட்டறிய முடியாத கலாச்சார மரபுகள் பற்றிய யுனெஸ்கோ பட்டியலில் தீபாவளி பண்டிகை சேர்க்கப்பட்டிருப்பதை பிரதமர் திரு நரேந்திர மோடி வரவேற்றுள்ளார்.

12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில், இதுவரை 99.98 சதவிகித வாக்காளர்களுக்கு எஸ் ஐ ஆர் படிவங்கள் வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில், தகுதி உள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும்,பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்படும் என புதுச்சேரி அரசு அறிவித்துள்ளது.

*முர்மு-மனித உரிமை*

மனித உரிமைகளை பாதுகாக்கும் நாடு என்பதற்கு அப்பாற்பட்டு, மனித உரிமைகளை கொண்டாடும் நாடாக இந்தியா திகழும் என்று குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறி உள்ளார். இன்று புதுடெல்லியில் மனித உரிமைகள் தின விழா, மற்றும், அனைவருக்கும் அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றுவது குறித்த தேசிய மாநாட்டில், அவர் உரையாற்றினார். குடியரசு தலைவர் உரை குறித்து கூடுதல் விவரங்கள் .............

(வாய்ஸ்)

தனி நபர்களின் கண்ணியம், சமரசங்களுக்கு அப்பாற்பட்டது என்றும், தனிப்பட்ட நபர்களின் மனித உரிமைகளை, எவரும் பறிக்க முடியாது என்றும் குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, தமது உரையில் கூறினார். உலக அளவிலான மனித உரிமை பாதுகாப்புக் கட்டமைப்பிற்கு வடிவம் கொடுப்பதில், இந்தியா முக்கிய பங்காற்றி இருப்பதையும், இந்தியாவின் அரசியல் நிர்ணய சபையில் பெண் உறுப்பினராக இடம் பெற்ற ஹன்சா மேத்தா, அனைவருக்குமான மனித உரிமை பிரகடனத்தின் வாசகங்களை, வரைந்தவர்களில் ஒருவர் என்பதையும், அவர் சுட்டிக்காட்டினார். குறிப்பாக பெண்களின் பொருளாதாரப் பங்களிப்பு மற்றும் கண்ணியத்தை மேம்படுத்துவதன் மூலமாகவே, இந்தியாவின் சுயசார்பு வலுவடைந்து வருவதாக அவர் குறிப்பிட்டார். முன்னதாக, பிரதமரின் முதன்மை செயலர் டாக்டர் பி கே மிஸ்ரா இம்மாநாட்டில் பேசுகையில், பரிவான திறன்மிகு நிர்வாகம் மூலமான அனைத்து மக்களுக்கும் கண்ணியமான வாழ்க்கை வழங்குவதே வரவிருக்கும் 10 ஆண்டுகளில் இந்தியாவின் நோக்கமாக இருக்கும் என்றார். நல்லாட்சியும், மக்களின் முக்கிய உரிமைகளில் ஒன்று தான் என்றும், தகுதி உள்ள ஒவ்வொருவரும், அரசுத் திட்டங்களின் பலன்களைப் பெற வேண்டும் என்பதே பிரதமர் திரு நரேந்திர மோடியின் ஆழ்ந்த நம்பிக்கை என்றும் அவர் குறிப்பிட்டார்.

1948-ஆம் ஆண்டு இதேநாளில் தான் ஐ நா பொதுப் பேரவையில் அனைவருக்குமான மனித உரிமை பிரகடனம் ஏற்றுக் கொள்ளப்பட்டதும், 1950-ஆம் ஆண்டு முதல் டிசம்பர் 10-ஆம் தேதி மனித உரிமைகள் நாளாக கடைபிடிக்கப்படுவதும் குறிப்பிடத் தக்கது.

*தீபாவளி*

தொட்டறிய முடியாத கலாச்சார மரபுகள் பற்றிய யுனெஸ்கோ பட்டியலில் தீபாவளி பண்டிகை சேர்க்கப்பட்டிருப்பதை பிரதமர் திரு நரேந்திர மோடி வரவேற்றுள்ளார். யுனெஸ்கோ அமைப்பின் இந்த முடிவு உலகெங்கிலும் உள்ள இந்திய மக்களுக்கு, இன்ப அதிர்ச்சியாகவே அமைந்திருப்பதாக, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் அவர் கூறி உள்ளார்.

இந்திய கலாச்சார மரபுகளுடன் ஆழமான தொடர்புடைய பண்டிகை தீபாவளி என்றும், இந்திய பாரம்பரியத்தின் ஆன்மாவாகவே தீபாவளி திகழ்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார். தீபாவளி பண்டிகை யுனெஸ்கோ பண்டிகையில் சேர்க்கப்பட்டுள்ளதால் உலக அளவில் அதன் அதிகாரமும், புகழும் பெருகும் என பிரதமர் மேலும் கூறி உள்ளார். தொட்டறிய முடியாத கலாச்சார மரபுகள் பற்றிய யுனெஸ்கோ பட்டியலில் தீபாவளி பண்டிகை சேர்க்கப்பட்டுள்ளதை, குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன், மத்திய கலாச்சாரத் துறை அமைச்சர் திரு கெஜேந்திர சிங் ஷெகாவத் உட்பட பலரும் வரவேற்றுள்ளனர்.

மோடி-வங்கி

மத்திய அரசின் உங்கள் பணம்-உங்கள் உரிமை இயக்கத்தை, மக்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என பிரதமர் திரு நரேந்திர மோடி அழைப்பு விடுத்துள்ளார். சமூக ஊடகத்தில் இதுகுறித்த பதிவு ஒன்றை அவர் பகிர்ந்து கொண்டு, மறந்து போன வங்கி கணக்கு, காப்பீட்டுத் திட்டம், மற்றும் இதர நிதி கணக்குகளில் உள்ள பணத்தை மக்கள் பெற்றுக் கொள்ள புதிய வாய்ப்புகளை இத்திட்டம் வழங்குவதாக தெரிவித்துள்ளார்.

ஓமியோபதி

மத்திய ஆயுஷ் துறை அமைச்சகத்துடன் இணைந்து உலக சுகாதார அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, பாரம்பரிய மருத்துவம் குறித்த, 2-ஆவது உலக உச்சி மாநாடு, வரும் 17 முதல், 19-ஆம் தேதி வரை, புதுடெல்லி பாரத் மண்டபத்தில் நடைபெற உள்ளது. ஓமியோபதி ஆராய்ச்சிக்கான மத்திய கவுன்சில் மற்றும் அதன் நிறுவனங்கள் உட்பட ஆயுஷ் அமைச்சகத்தின் கீழ் வரும் பல்வேறு துறைகள், இம்மாநாடு குறித்த தகவல்களை தீவிரமாக பரப்பி வருகின்றன.

சுகாதார நல வாழ்வு குறித்த அறிவியல் மற்றும் நடைமுறைகள் மூலம் சமநிலையை மீட்டெடுத்தல் என்ற கருப்பொருள் அடிப்படையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இம்மாநாட்டில், நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து, அமைச்சர்கள், கொள்கை வகுப்பாளர்கள், சுகாதார தலைவர்கள், ஆராய்ச்சியாளர்கள், வல்லுனர்கள் மற்றும் தொழில் துறை

பிரதிநிதிகள் பங்கேற்க உள்ளனர். பாரம்பரிய மருத்துவத்தில் உலக அளவில் தலைமைத் துவம் பெற்றுள்ள நாடு இந்தியா என்றும், இந்தியாவின்

ஓமியோபதி

பாரம்பரிய மருத்துவ முறைகள் தற்போது உலக அளவில், நம்பகமான உடல்நலத் தீர்வுகளாக அங்கீகாரம் பெற்றுள்ளதாகவும், மத்திய ஆயுஷ்துறை இணை அமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ் கூறி உள்ளார். உச்சி மாநாடு குறித்து அண்மையில் புதுடெல்லியில் நடைபெற்ற முன்னோட்ட நிகழ்ச்சியில் அவர் பேசுகையில், மாநாட்டின் நிறைவு விழாவில் பிரதமர் திரு நரேந்திர மோடி கலந்து கொள்வார் என எதிர்பார்க்கப் படுவதாகவும் கூறினார்.

SIR

12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் தற்போது நடைபெற்று வரும் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப்பணிகளின் போது, இதுவரை 50.96 கோடி வாக்காளர்களுக்கு எஸ் ஐ ஆர் படிவங்கள் வழங்கப்பட்டுள்ளன. இது மொத்தம் உள்ள வாக்காளர் எண்ணிக்கையில், 99.98 சதவிகிதமாகும். வாக்காளர்களுக்கு வழங்கப்பட்ட எஸ் ஐ ஆர் படிவங்களில் 50- கோடிக்கும் மேற்பட்ட படிவங்கள் திரும்ப பெறப்பட்டு அதில் உள்ள விவரங்கள், டிஜிட்டல் வடிவத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. கேரளம் அல்லாத இதர 11 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில், நிரப்பப்பட்ட எஸ் ஐ ஆர் படிவங்களை நாளை வரை சமர்ப்பிக்கலாம் என்றும், கேரளத்தில் மட்டும் இதற்கான கடைசி நாள், வரும் 18-ஆம் தேதியாக இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

*புதுச்சேரி எஸ் ஐ ஆர்*

புதுச்சேரியில், எஸ்ஐஆர் படிவங்களை விநியோகித்து திரும்ப பெறுவதில், வாக்குச்சாவடி நிலை அதிகாரிகளுக்கு உதவி வரும் அரசியல் கட்சிகளின் வாக்குச்சாவடி நிலை முகவர்கள், எஸ்ஐஆர் நடைமுறைகளில் மக்கள் மிகுந்த ஆர்வம் காட்டுவதாக தெரிவித்துள்ளனர். நெட்டப்பாக்கம் தொகுதியைச் சேர்ந்த, பாரதிய ஜனதா கட்சியின்

வாக்குச்சாவடி நிலை முகவர்களில் ஒருவரான தமிழ் மாறன், இதுகுறித்து எமது செய்தியாளரிடம் பேசுகையில்..........

*புதுச்சேரி-பொங்கல்*

வரவிருக்கும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, புதுச்சேரி, காரைக்கால், மாகே மற்றும் ஏனாம் பகுதிகளில் உள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும், தலா 4 கிலோ பச்சரிசி, 1 கிலோ நாட்டு சர்க்கரை, 300 கிராம் நெய் உட்பட 5 வகையான பொருட்கள் அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்படும் என புதுச்சேரி அரசு அறிவித்துள்ளது. அரசு ஊழியர்கள் மற்றும் கவுரவ குடும்ப அட்டை தாரர்களுக்கு இது பொருந்தாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. பொங்கல் பரிசுப் பொருட்கள், கான்பெட் நிறுவனத்தால் கொள்முதல் செய்யப்பட்டு, ஜனவரி 3-ஆம் தேதி முதல், அனைத்து நியாய விலைக் கடைகள் மூலம், விநியோகம் செய்யப்படும் என்றும் குடிமைப் பொருள் வழங்கு துறை தெரிவித்துள்ளது.

*காசி-தமிழ் சங்கமம்*

காசி தமிழ் சங்கமம், இந்தியாவின் ஆன்மாவை ஒருங்கிணைக்கும் திருவிழாவே தவிர வெறும் கலாச்சார நிகழ்வு அல்ல என்று மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை இணை அமைச்சர் திரு வி எல் வர்மா கூறி உள்ளார். தற்போது நடைபெற்று வரும் காசி தமிழ் சங்கமம் குறித்து இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஒரே பாரதம்-உன்னத பாரதம் என்னும் கனவை நனவாக்கும் வகையில் காசி தமிழ் சங்கமம் அமைந்திருப்பதாக கூறினார். தமிழ் கற்கலாம், தமிழ் கற்போம் போன்ற பல்வேறு நிகழ்வுகளும் காசி தமிழ் சங்கமத்தில் இடம் பெறுவதால் இந்திய மொழிகளுக்கு இடையிலான தேசியப் பாலமாகவும் இந்நிகழ்வு திகழ்வதாக அவர் தெரிவித்தார். காசி தமிழ் சங்கமத்தை ஒட்டி, தமிழகத்தில் இருந்து புறப்பட்ட அகத்திய முனிவர் வாகனப் பயணம் இன்று காசி வந்து சேரும் என்றும், அமைச்சர் தெரிவித்தார். கொண்டாட்டங்கள் ராமேஸ்வரத்தில் நிறைவடையும் என்றும் அமைச்சர் கூறினார்.

*மீனவர்-விடுதலை*

கடந்த நவம்பர் 3-ஆம் தேதி இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 33 தமிழக மீனவர்கள் இன்று இலங்கை சிறைகளில் இருந்து விடுவிக்கப்பட்டனர். நாகை, மயிலாடுதுறை, கோட்டை பட்டிணம் மற்றும் ராமேஸ்வரத்தைச் சேர்ந்த இம்மீனவர்கள் தாயகம் திரும்பத் தேவையான அவசரகால சான்றிதழ்களை, இலங்கையில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகள் வழங்கி உள்ளனர்.

*வானிலை*

கிழக்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக இன்றும் நாளையும், தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழக உள் பகுதிகளில் அதிகாலை வேளையில் பனிமூட்டம் காணப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வரும் 16-ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக நாகப் பட்டிணத்தில் 4 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது. காரைக்காலில் 1 சென்டிமீட்டர் மழை பெய்துள்ளது.

*அமேசான் முதலீடு*

அமேசான் நிறுவனம் சுமார் 2030-ஆம் ஆண்டிற்குள் இந்தியாவை 35 பில்லியன் டாலர் முதலீடு செய்யப் போவதாக இன்று அறிவித்துள்ளது. புதிய சந்தை வாய்ப்புகளுக்கான அமேசான் நிறுவனத்தின் முதுநிலை துணைத் தலைவர் திரு அமித் அகர்வால் புதுடெல்லியில் இன்று நடைபெற்ற, அமேசான் சம்பவ் உச்சி மாநாட்டில் இதை அறிவித்தார். இந்தியாவில் செயற்கை நுண்ணறிவுத் திறன்களை விஸ்தரிக்கவும் சரக்கு போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் சிறு வணிகர்களுக்கு ஆதரவு அளிக்கவும் புதிய முதலீடுகள் பயன்படுத்தப்படும் என அவர் தெரிவித்தார். இந்தியாவின் விக்சித் பாரத் இலக்குகளுக்கு ஏற்ப அமைந்துள்ள அமேசான் நிறுவனத்தின் புதிய முதலீட்டு உத்தேசங்களால், இந்தியாவில் கூடுதலாக 1 மில்லியன் வேலை வாய்ப்புகள் உருவாகும் என்றும் அவர் கூறினார். ஏற்கனவே

மைக்ரோ சாப்ட் நிறுவனம், இந்தியாவில் 17 பில்லியன் டாலர் முதலீட்டு உத்தேசங்களை அறிவித்து இருப்பதும் குறிப்பிடத் தக்கது.

*ராஜாஜி*

மூதறிஞர் ராஜாஜி பிறந்த நாளான இன்று குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன், அன்னாருக்கு புகழாரம் சூட்டி உள்ளார். அபார விவேகத்துடன் கூடிய ராஜதந்திரயாக திகழ்ந்த, சி. ராஜகோபாலாச்சாரியார், தெளிவான சிந்தனை மற்றும் ஜனநாயகம் மீதான மாறாத நம்பிக்கை மூலம் இந்தியாவின் பொது வாழ்வை வடிவமைத்தவர் என்று சமூக ஊடகப் பதிவு ஒன்றில், குடியரசு துணைத் தலைவர் கூறி உள்ளார். மூதறிஞர் ராஜாஜியின் வாழ்வும்-புகழும், நேர்மை, புத்தி கூர்மை மற்றும் மக்கள் சேவைக்கு பாடுபடும் அனைவருக்கும் வழிகாட்டியாக திகழும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

மனித உரிமைகளை பாதுகாக்கும் நாடு என்பதற்கு அப்பாற்பட்டு, மனித உரிமைகளை கொண்டாடும் நாடாக இந்தியா திகழும் என்று குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறி உள்ளார்.

தொட்டறிய முடியாத கலாச்சார மரபுகள் பற்றிய யுனெஸ்கோ பட்டியலில் தீபாவளி பண்டிகை சேர்க்கப்பட்டிருப்பதை பிரதமர் திரு நரேந்திர மோடி வரவேற்றுள்ளார்.

12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில், இதுவரை 99.98 சதவிகித வாக்காளர்களுக்கு எஸ் ஐ ஆர் படிவங்கள் வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில், தகுதி உள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும்,பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்படும் என புதுச்சேரி அரசு அறிவித்துள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.